செ.வெ.எண்:29 நாள்:13.10.2020

## பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் 2020-21 நிதியாண்டில் தோட்டக்கலை பயிர் சாகுபடியில் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் பொருட்டு இயற்கை முறையில் காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட உள்ளது.

தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் இயற்கை முறையில் காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு ரூ.4,000/-ம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.3,750/-ம் வழங்கிட ரூ.16.5 நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மேலும், இயற்கை விவசாயிகளுக்கு அங்ககச் சான்று வழங்கவும் ரூ.500/- வழங்கப்பட உள்ளது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் தனி நபராகவோ, குழு உறுப்பினர்களுடன் சேர்ந்து குழுக்களாகவோ விண்ணப்பிக்கலாம். விவசாயிகள் நில ஆவணங்கள், ஆதார், குடும்ப நகல் அட்டை மற்றும் வங்கி கணக்கு புத்தக நகலுடன் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி முன்பதிவு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**